## எங்கள் பக்கம்

"படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயின்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன்று ஈயின்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே". – திருமந்திரம்

உலகியலில் கூட ஒரு தாய்க்கு ஒரு பொருளைத் தருதலினும் அவளுடைய குழந்தைக்கு அதனைத் தருவது மூலம் அத்தாயின் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்க முடியும் அதுபோல்

கற்றதை நன்கு தெரிந்து கொண்டு, அடக்கத்துடன் தீயனவற்றை நீக்கி நல்லன செய்து, பெற்றிருப்பதைக் கொண்டு மனநிறைவுடன் திருத்தமாகப் பற்ற வேண்டியதைப் பற்றி பணி அறவழியில் நிற்க ஒன்றாக விளங்கும் இறைவனை உணர்ந்து நின்று ஒழுகுபவரே நீண்ட நன்னெறியில் செயல்பவர் ஆவர்.

பிறர்க்கு செய்யும் உதவி கண்டு இறைவன் மகிழ்கிறான் என்ற பெரியோர்களின் வாக்கை உணர்ந்து உங்களுடன் பயணிப்போம் ! பணி செய்வோம் !! பிறர் மகிழ வாழ்ந்து காட்டுவோம் !!.

இவண்






**Rtn.L.செந்தில்குமார்** தலைவர்
**Rtn.B.செந்தில்** செயலர்
**Rtn.D.மோகனசுந்தரம்** பொருளர்

**ஆடுதுறை ரோட்டரி சங்கம்**

30.7.2025 அன்று புதன்கிழமை மாலை 7 மணியளவில் நமது சங்கத்தின் வாராந்திரக் கூட்டம் இனிதே துவங்கி நடைபெற்றது. இக்கூட்டம் நமது உறுப்பினர்களின் எட்டாவது சங்கமமாக அமைந்தது. தலைவர் Rtn.L.செந்தில்குமார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தின் வரவேற்புரையை Rtn.A.இஸ்மத் பாட்ஷா ஆற்றினார்கள். நமது சங்கத்தின் சார்பாக "Voice of Rice City" நெல்நகரின் குரல் – என்ற மாத இதழ் வெளியிடப்பட்டது. ஜுலை மாதம் முதல் இதழை Zone-16 ன் துணை ஆளுநர் Rtn.சு.வெங்கடேசன் அவர்கள் வெளியிட, ஆடுதுறை Rice City Matric மேல்நிலைப் பள்ளியின் தாளாளர் திரு. MJA.ஜமால் முகம்மது இப்ராஹிம் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். துணை ஆளுநர் அவர்கள் தமது உரையில் RI Dues District Dues மற்றும் Magazine dues - காலதாமதமின்றி உடனடியாக செலுத்தியமைக்கும், அதிகமாக 16 உறுப்பினர்கள் (74%) சேர்ந்ததற்கு மனதார பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தார். சங்கத்தின் சந்தா தெகை விபரங்கள் பற்றி Rtn.A.பரணிதரன் எடுத்துரைத்தார். இக்கூட்ட சிறப்பு அழைப்பாளர் முன்னாள் பேராசிரியர் Rtn.G.திருநாவுக்கரசு அவர்கள் புதிய உறுப்பினர்கள் மற்றும் மூத்த உறுப்பினர்களை உற்சாகமூட்டும் வகையிலும் ரோட்டரியின் பெருமைகளையும், முக்கியத்துவத்தையும் அழகாக எடுத்துரைத்தார்கள். 90% உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பித்த உறுப்பினர்களுக்கு பொருளாளர் Rtn.D.மோகனசுந்தரம் அவர்கள் விருந்துஉபசரிப்பு அளிக்க நன்றியுரையை முன்னாள் தலைவர் Rtn.N.பக்கிரிசாமி அவர்கள் கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## மாவட்ட ஆளுநர் வருகை

நமது 2981-ன் மாவட்ட ஆளுநர் அவர்களின் அலுவல் நிமித்த வருகை 02.08.2025 சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்றது. நமது சங்கம் எதிர்வரும் ஓர் ஆண்டு காலத்தில் செயல்படுத்த உள்ள திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்து கேட்டறிந்தார்கள். மாவட்ட நிர்வாகத்திற்கும், சங்கத்திற்கும் பெருமை சேர்க்கும் விதமாக செயல்பாடுகள் சிறப்பாக அமைய நல்ல கருத்துக்களை கூறியும், அடுத்தத் தலைவர் தேர்வு குறித்தும், அவருடனும் ஆலோசனைகள் வழங்கி சிறப்பித்தார்கள். ஆளுநர் உடனான தனி அறை சந்திப்புக்குப் பின் நடைபெற்ற கூட்டத்தில் **Rtn.A.**ஹஜ் முகம்மது அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். தலைவர் **Rtn.L.**செந்தில்குமார் அவர்களின் உரை மற்றும் செயலர் **Rtn.B.**செந்தில் அவர்களின் செயலறிக்கைக்குப் பின் ஆளுநர் அவர்களிடம் **The Rotary Foundation-**க்கு ரூ. **50,000/-** க்கான காசோலையை **Rtn.N.**பக்கிரிசாமி மற்றும் **Rtn.A.**பரணீதரன் இருவரும் வழங்கினார்கள். மேலும் **The Rotary Foundation Polio** நிதியாக ரூ. **50,000/-** க்கான காசோலையை **Rtn.N.**விக்னேஷ், **Rtn.B.**வெங்கடேஷ், **Rtn.J.**சுந்தர் மற்றும் **Rtn.S.**கார்த்திக் ஆகியோர் இணைந்து ஆளுநர் மற்றும் துணை ஆளுநர் அவர்களிடம் வழங்கினார்கள். ஆளுநர் மற்றும் துணை ஆளுநர்களுக்கு ஆளுயர மாலை அணிவித்து நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டது. நிறைவாக **Rtn.G.**கங்காதரன் நன்றியுரை கூற, **Rtn.N.**விஜயகுமார் அவர்களின் மதிய விருந்துடன் இனிதே ஆளுநர் அலுவலர் நிமித்தமான வருகைக் கூட்டம் சிறப்புடன் நடந்தேறியது.

**சங்கமம் - 10**

05.08.2025 அன்று தாய்ப்பால் வார விழாவினை முன்னிட்டு நமது சங்கம் துகிலி ஆரம்ப சுகாதார நிலையத்தில் கொண்டாடப்பட்டது. இக்கூட்டத்திற்கு முன்னாள் தலைவர் Rtn.N.பக்கிரிசாமி, Rtn.S.சிவசுப்ரமணின், Rtn.G.கங்காதரன், Rtn.M.ரவிச்சந்திரன் மற்றும் Dr.S.பத்மினி அவர்கள் கலந்து கொண்டனர். தாய்ப்பாலின் முக்கியத்துவதையும், அவசியத்தையும் மருத்துவர்கள் Dr.சதீஷ்குமார் மற்றும் Dr.இப்தியாஸ் அவர்கள் மற்றும் தலைவர் Rtn.L.செந்தில்குமார் ஆகியோரும் எடுத்துக் கூறினார்கள். நிறைமாத கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு (பயணாளிகள் 27 பேர்களுக்கு) சத்துமாவு பாக்கெட், பேரிச்சை பாக்கெட் இவைகளுடன் முருங்கை, கறிவேப்பிலை மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

**சங்கமம் - 11**

உலகத் தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு 06.08.2025 அன்று காலை 10.30 மணியளவில் ஆடுதுறை அரசு பொது மருத்துவமனைகளில் கொண்டாடப்பட்டது. சங்கத் தலைவர் Rtn.L.செந்தில்குமார் அவர்கள் தலைமையேற்க சித்தா மருத்துவர் Dr.தங்க. மகேஸ்வரி மற்றும் Dr. விஜய கலாரஞ்சனி முன்னிலையில் துவங்கி நடைபெற்றது. தாய்ப்பாலின் முக்கியத்துவம் அதனால் தாய் சேய்க்கும் ஏற்படும் நன்மைகள் குறித்து தலைவர், மருத்துவர்கள் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினார்கள். நிறைமாத கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், சிகிச்சை பெற வந்த பெரியோர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்ட பொதுமக்கள் உள்ளிட்ட

அனைவருக்கும் வேகவைத்த நிலக்கடலை சுண்டலும், தேநீரும் வழங்கப்பட்து. பயனாளிகள் 52 பேருக்கு சத்துமாவு, பேரீச்சை பாக்கெட், முருங்கை மற்றும் கறிவேப்பிலை கன்றுகள் வழங்கப்பட்டது. முன்னாள் தலைவர் **Rtn.N.**பக்கிரிசாமி நன்றியுரை நவின்றார்கள்.

**சங்கமம் - 12**

உலகத் தாய்ப்பால் வார விழாவின் மூன்றாவது நாளாக 06.08.2025 அன்று நரசிங்கன்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் கொண்டாடப்பட்டது. தலைவர் **Rtn.L.**செந்தில்குமார் அவர்கள் தலைமையில் நிலைய மருத்துவர் **Dr.** பவித்ரா அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் நரசிங்கன்பேட்டை ரோட்டரி சமுதாயக் குழுமத்தின் ஆலோசகர் **G.S.**மகாலிங்கம், தலைவர் **R.**ரவிச்சந்திரன், செயலர் **P.**சண்முகம், ஒருங்கிணைப்பாளர் **M.**முத்துக்குமரன் நமது சங்க பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர். பயனாளிகள் 21 பேருக்கு சத்துமாவு பாக்கெட், பேரீச்சம் பாக்கெட், முருங்கை மரக்கன்று மற்றும் கறிவேப்பிலைக் கன்று வழங்கப்பட்டது. நிறைவாக **Rtn.A.**இஸ்மத் பாட்ஷா நன்றி கூற விழா சிறப்புற முடிவுற்றது.

**சங்கமம் - 13**

10.08.2025 பட்டுக்கோட்டையில் நடைபெற்ற **Public Image Seminar Conference** ‘தோரணை’-ல் இன்னாள் மற்றும் முன்னாள் தலைவர், செயலாளர்கள் உடன் **Rtn.M.**ரவிச்சந்திரன், **Rtn.**பொன்னரசன் மற்றும் **Rtn.R.**செந்தில்குமார் உள்ளிட்ட ஒன்பது பேர் கலந்து கொண்டு சிறப்பு சேர்த்தனர்.

**சங்கமம் - 14**

15.08.2025 - 79-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நமது சங்கத்தின் சார்பாக சுதந்திர தின விழா பொருளாளர் **Rtn.D.**மோகனசுந்தரம் அவர்களின் சிறப்பான ஏற்பாட்டின் பேரில் நடைபெற்றது. காலை 8.00 மணியளவில் ஆடுதுறை **S.D.**பெட்ரோல் பங்க் வளாகத்தில் இந்திய தேசியக் கொடியை **Rtn.D.**மோகனசுந்தரம் அவர்கள் ஏற்றி வைத்தார்கள். முன்னாள் தலைவர் **Rtn.N.**பக்கிரிசாமி, **Rtn.M.P.**மனோகரன், **Rtn.G.**கங்காதரன், **Rtn.S.**சிவசுப்ரமணியன், **Rtn.A.**இஸ்மத் பாட்ஷா ஆகியோர் சிறப்புரையாற்ற சிறப்பாக நடைபெற்றது.

**சங்கமம் - 15**

15.08.2025 அன்று துகிலி கஸ்தூரிபா காந்தி குருகுலம் நடுநிலைப்பள்ளியில் காலை 9.30 மணியளவில் தலைவர் **Rtn.L.**செந்தில்குமார் அவர்கள் தலைமையேற்க பள்ளியின் செயலர் **R.**முத்தையன் அவர்கள் முன்னிலைய வகித்தார்கள். **Rtn.N.**பக்கிரிசாமி, **M.P.**மனோகரன், **G.**கங்காதரன், **A.**இஸ்மத் பாட்ஷா ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். சுகாதாரமான நீரை அருந்துவதற்காக சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கருவியை **(RO System)** நமது சங்கத்தின் சார்பாக பள்ளிக்கு வழங்கப்பட்டது. ரூ. 20,000/- மதிப்பிலான குடிநீர் சுத்திகரிப்பு கருவியை பள்ளிக்கு வழங்கியதற்காக நமது சங்கத்தினரை பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் பாராட்டி மகிழ்ந்தனர். விழா இறுதியில் **Rtn.S.**சிவசுப்ரமணியன் நன்றி கூற இனிதே முடிவு பெற்றது.

**சங்கமம் - 16**

15.08.2025 காலை 10.30 மணியளவில் 79-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நமது சங்கத்தின் சார்பாக 79 அரச மரக் கன்றுகள் நடவு செய்யும் விழா நடைபெற்றது. நரசிங்கன்பேட்டை இரயில் நிலையம் எதிரில் சுமார் 5 அடி உயரமுள்ள அரச மரக் கன்றுகளை நமது சங்கத்தின் தலைவர், செயலர் உள்ளிட்ட மூத்த உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் 15 பேர் கலந்து கொண்டு நடவு செய்து சிறப்பித்தனர். சுற்றுச்சூழல் மாசினைக் குறைக்கவல்ல அரசமரக் கன்றுகளை நடவு செய்ததற்கு பொதுமக்கள் நன்றி கூறி மகிழ்ந்தனர். நரசிங்கன்பேட்டை ரோட்டரி சமுதாயக் குழும முன்னோடிகளும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வுகளை சங்க உறுப்பினர் Rtn.N.செல்வகுமரன் முன்னின்று சிறப்பாக ஏற்பாடு செய்திருந்ததற்கு சங்கத்தின் சார்பாக பாராட்டுக்களை உரித்தாக்குகிறோம்.

**சங்கமம் - 17**

15.08.2025 அன்று இரவு 7.00 மணியளவில் நமது சங்கத்தின் அம்மா என்று அன்போடு அழைக்கப்படுகின்ற முன்னாள் தலைவர், மகளிர் நல இயக்குநர் Rtn.P.V.ராஜாத்தி அவர்களின் பிறந்த நாள் விழா நமது சங்கத்தின் சார்பாக அவரது இல்லத்தில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் இன்னாள், முன்னாள் தலைவர், செயலாளர், உடன் மூத்த உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அனைவருக்கும் Rtn.N.பக்கிரிசாமி அவர்கள் சிறப்பான முறையில் உணவு ஏற்பாடு செய்திருந்தது சிறப்பான செயலாகும். அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் நன்றிகளை காணிக்கையாக்குகின்றோம்.

# கா... கா... கா...

மனிதர்களுக்கு ஆடு, மாடு, நாய், பூனை போன்ற விலங்குகள் மிகவும் நெருக்கமாக இருப்பதுபோல, பறவைகளில் காகமும் நெருக்கமானது. காகங்களைப் பற்றிக் கொஞ்சம் பார்ப்போமா?



- ❖ காகம் கார்விடே குடும்பத்தைச் சேர்ந்தது.
- ❖ காகம் பொதுவாகக் கரிய நிறம் கொண்டது.
- ❖ உலகில் இதுவரை 40 வகையறாக் காகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- ❖ தென் அமெரிக்கா மற்றும் பசிபிக் கடலில் உள்ள சில தீவுகளில் காகம் கிடையாது.
- ❖ காகக் கூட்டத்தை ஆங்கிலத்தில் மர்டர் என்று அழைக்கிறார்கள்.
- ❖ காகத்தின் பிறப்பிடம் ஆசியா
- ❖ காகங்கள் சராசரியாக 20 வயது வரை வாழ்கின்றன.
- ❖ யுத்தம் மற்றும் மரணத்துடன் இணைத்து காகத்தைப் பார்க்கும் பழக்கம் அயர்லாந்து மக்களக்கு உள்ளது.
- ❖ இந்தியாவைப் போலவே ஸ்வீடனில் இறந்தவர்களின் ஆவியாகக் காகத்தைக் கருதுகிறார்கள்.
- ❖ டென்மார்க்கில் காகம், பேய் ஒட்டுபவர்களின் பறவையாகப் பார்க்கப்படுகிறது.
- ❖ ஆஸ்திரியாவில் காகத்தைத் தந்திரமும், புத்திசாலித்தனமும் நிறைந்த பறவையாக நினைக்கிறார்கள்.

**அன்னபூரணா திட்டம் - 4**

2.8.2025 அன்று கிருஷ்ணாபுரம் முதியோர் இல்லத்தில் **Rtn.M.**ரவிச்சந்திரன் அவர்களால் மதிய உணவு வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

**அன்னபூரணா திட்டம் - 5**

3.8.2025 அன்று மயிலாடுதுறை அன்பகம் காப்பகத்தில் சேவைப் பணியில் முதல்வராய் இருக்கும் **Rtn.A.**பரணிதரன் அவர்கள் தனது மகன் பிறந்தநாளை முன்னிட்டு மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு அறுசுவை விருந்து படைக்கப்பட்டது.

**அன்னபூரணா திட்டம் - 6**

24.8.2025 அன்று மயிலாடுதுறை அன்பகம் இல்லத்தில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் காப்பகத்தில் **Rtn.D.**சந்திரமோகன் அவர்கள் மதிண உணவு வழங்கி சிறப்பித்தார்கள்.

**ஆகஸ்ட் 23 & 24**

**Chennai Trade Centre** ல் நடைபெற்ற **Rotary International** மாநாட்டில் நமது சங்கத்தின் சார்பில் **Rtn.M.**ரவிச்சந்திரன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தது பெருமையுடன் பாராட்டுகிறது.

*இதழ் பொறுப்பாளர்கள்*

| | |
|---|---|
| Rtn.N.**செல்வக்குமரன்** | M.**முத்துக்குமரன்** |
| திட்ட வகுப்பாளர் | ஒருங்கிணைப்பாளர் |
| ஆடுதுறை ரோட்டரி சங்கம் | ரோட்டரி சமுதாய குழுமம், |
| | நரசிங்கன்பேட்டை. |

# ஆடுதுறை ரோட்டரி சங்கம்

## தாய்ப்பால் குழந்தை அருந்துவதால் குழந்தைக்கு


1. ஆஸ்துமா ஏற்படுவதை தடுக்கிறது.
2. ஒவ்வாமை, உணவு ஒவ்வாமை எக்ஸிமா, அடோபி ஏற்படுவதை தடுக்கிறது.
3. புரிந்து செயல்படும் தன்மையை அதிகரிக்கிறது.
4. சுவாச கோளாறுகள், கிருமிகளால் சுவாச உறுப்புகள் பாதிப்பு தடுக்கப்படுகிறது.
5. செயற்கை உணவுகளில் சில கலப்புகளினால் ஏற்படும் மரண பாதிப்பை தடுக்கிறது.
6. லுகோமியா மற்றும் குழந்தை பருவ புற்றுநோய் ஏற்படுவதை தடுக்கிறது.
7. நோய்கள், நீரழிவு நோய், கொடூர புற்றுநோய், சிலியாக் வராமல் தடுக்கிறது.
8. நீரழிவு நோய் வராமல் தடுக்கிறது.
9. இதயசுவர்கள், இதயவால்வுகள் தமனிகள், சிரைகள் பாதுகாப்பு.
10. உடல் பருமன் ஏற்படாமல் தடுக்கிறது.
11. ஜீரண உறுப்புகள் பாதிப்பு அடையாமல் பாதுகாக்கிறது.
12. டயேரியா ஏற்படுவதை தடுக்கிறது.
13. கிருமிகளால் காதுக்கு ஏற்படும் பாதிப்பை குறைக்கிறது.
14. சுற்றுப்புற சூழல்களால் ஏற்படும் பாதிப்பை தடுக்கிறது.

## இந்திய அரசின் புதிய வழிகாட்டுதல் / கொள்கை

1. குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் தாய்ப்பால் தரவேண்டும்.
2. 6 மாதம் முடிய தாய்ப்பால் மட்டுமே தரவேண்டும் (4-6 மாதம் என்பது 2001க்கு முந்திய அறிவுரை இந்த மாற்றத்தை அனைவரும் அறிய செய்ய வேண்டும்)
3. 6 மாதத்திற்கு பிறகு இணை உணவுடன் தாய்ப்பாலை இரண்டு வயது முடியும் வரையும் அல்லது அதற்கு பிறகும் தொடர்ந்து கொடுக்க வேண்டும்.
4. வீட்டில் தயாரிக்கப்படும் பொருத்தமான/சத்தான/சுகாதாரமான இணை உணவை 6 மாதத்திற்கு பிறகு கொடுக்க வேண்டும்.

Rotary

# ஆடுதுறை ரோட்டரி சங்கம்



## வீடுகளில் மின்சாரத்தை சிக்கனமாக சேமிக்கும் வழிகள்

1. **ISI** முத்திரை கொண்ட சாதனங்கள் மற்றும் வயர்களை பயன்படுத்த வேண்டும்.
2. அனுபவம் மற்றும் அனுமதி பெற்ற மின் தொழிலாளர்களைக் கொண்டே வயரிங் செய்ய வேண்டும்.
3. அதிகமான தூரத்திற்கு சில்க் வயர்களை பயன்படுத்தக் கூடாது.
4. சாதா பல்புகளுக்கு பதில் அதிக திறன் கொண்ட ஆவி விளக்குகளைப் பயன்படுத்த வேண்டும்.
5. அதிக ஒளியைக் கொடுப்பதுடன் 5 மடங்கு வரை செலவு குறையும்.
6. தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்துவதன் மூலம் மின் செலவுகுறையும்.
7. மின் விசிறிகளுக்கு எலக்ட்ரானிக் ரெகுலேட்டரைப் பயன்படுத்த வேண்டும்.
8. டியூப் லைட்களுக்கு எலெக்ட்ரானிக் சோக் பயன்படுத்த வேண்டும்.
9. சமையல் வேலைகளுக்கு, சாதாரண மின் அடுப்புகளை **(Coiled Heater)** தவிர்க்க வேண்டும். மாறாக மைக்ரோவேவ் **(Microwave)** மின் அடுப்புகளை பயன்படுத்தலாம்.
10. குளிர்சாதனப் பெட்டியின் கதவை அடிக்கடி திறக்ககூடாது. தேவைக்கேற்ற அளவான பாத்திரங்களை **(Container)** மட்டும் அதற்குள் பயன்படுத்த வேண்டும்.

11. சூடான திட, திரவ பொருட்களை குளிர்சாதனபெட்டியில் கண்டிப்பாக வைக்கக்கூடாது.
12. மின்சாதனங்களுக்கு வோல்டேஜ், ஸ்டெப்லைசர் பொருத்த வேண்டும்.
13. மின்பவர் சாதனங்களை (Power Loads) மாலை 6 மணி முதல் 9 மணி வரை இயக்குவதை தவிர்க்க வேண்டும்.
14. வெளியே செல்லும்போது விளக்குகள், விசிறிகள் ஆகியவற்றை நிறுத்திவிட்டு செல்ல வேண்டும்.
15. ஆடம்பர விளக்குகள் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.
16. தேவையில்லாமல் மின்விளக்குகளையும், மின்விசிறிகளையும் இயக்ககூடாது.
17. இரவு விடி விளக்குகளுக்கு 15 வாட்ஸ் (Fifteen Walts) பல்புகளை பயன்படுத்த வேண்டும்.
18. அதிகாலையில் தேவைப்படும் வெந்நீருக்கு முதல்நாள் இரவே வாட்டர் ஹீட்டர் போடுவதைத் தவிர்த்தல் நல்லது.
19. கிரைண்டர் மற்றும் வாஷிங் மெஷின் பெல்டுகள் தொய்வடையாமல் அவ்வப்போது பராமரிக்க வேண்டும்.
20. நாம் சேமிக்கும் ஒவ்வொரு யூனிட் மின்சாரம் (சிக்கனம்) இரண்டு யூனிட் மின் உற்பத்திக்கு சமம்.
21. சூரிய ஒளி இருக்கையில் மின்னொளி எதற்கு?
22. திட்டமிட்டு தேவைக்கேற்ப ஜன்னல்கள் அமைத்து வீடு கட்டினால் நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் கிடைக்குமல்லவா?
23. வீட்டில் அதிக நேரம் மின் விளக்கு பயன்படுத்தும் இடங்களில் உடன் C.F.L. Lamp பயன்படுத்துவதன் மூலம் அதிக மின்சாரத்தை சேமிக்கலாம்.